# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 186/மா/2022**

**நாள் : 26.11.2022**

திரு. G. தேவா,
வடபழனி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1. செயற்பொறியாளர்,
2. உதவி செயற்பொறியாளர்,
3. உதவி நிர்வாக பொறியாளர்,
   மண்டலம் - 9, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 30.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 186/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் முறையீட்டு மனுவில்,

"பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு -112, பகுதி – 26, மண்டலம் - 9, கதவு எண்.57, சிவன் கோயில் தெற்கு தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024, என்கின்ற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலின்படி அடுக்குமாடி வீடு கட்டாமல், விதிமுறைக்கு மீறி கட்டடம் கட்டி வருகிறார்கள்.

இது சம்மந்தமாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 03.06.2022 அன்று எனது சகோதரர் K. வேலு விண்ணப்பித்தார் அதற்கு தகவல் வழங்கவில்லை, பின்பு 04.07.2022 அன்று முதல் மேல்முறையீட்டு விண்ணப்பம் அனுப்பினோம். அதற்கும் தகவல் வழங்காததால், இரண்டாம்

மேல்முறையீட்டு விண்ணப்பம் 09.08.2022 அன்று விண்ணப்பித்தோம். இன்று வரை பொது தகவல் அலுவலர் செயற் பொறியாளர் திரு. பானுகுமார் II அவர்கள் எந்த தகவலும் வழங்காமல் விதிமீறல் கட்டடம் கட்டுவதை தடுத்து நிறுத்தாமல் உள்ளார். ஆனால், பெயருக்கு Notice Calling for Approved Plan அல்லது Stop Work Notice வழங்குகிறார்கள். நீதிமன்றம் சென்றால் தான் Lock and Seal Notice வழங்குகிறார்கள்.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 8 தகவல் கேட்டோம். அதில் ஒரு தகவலுக்கு கூட பதில் தகவல் சரியாக வழங்கவில்லை. மேற்கண்ட கட்டடம் 3 மாதத்திற்கு முன்பு போட்டோ எடுக்கும் போது பாதி கட்டிய நிலையில் இருந்தது அப்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று அந்த கட்டடம் விதிமுறை மீறி கட்டி முடிக்கும் நிலை வரை வந்திருக்காது. மேற்கண்ட கட்டடம் விதிமுறைப்படி கட்டிருந்தால் எங்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தகவல் வழங்கியிருப்பார்கள். Completion Certificate வழங்கப்படாமலே மின் இணைப்பு, மின் மீட்டர் பொறுத்திவிட்டார்கள்.

ஒரு சதவீதம் கூட உயர்நீதிமன்றம் W.P.No.14520/2017 உத்தரவு மேற்கண்ட மண்டலம்-9ன் அலுவலர்கள் பின்பற்றவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் செ.வெ.எண்.97 நாள்:21.04.2022 படி கட்டிடம் கட்டுவதை மேற்கண்ட மண்டலம்-9ன் செயற்பொறியாளர் திரு. பானுகுமார் II, Unit 26ன் உதவி செயற்பொறியாளர் சித்ரா மற்றும் 11வது வார்டு உதவி நிர்வாகம் பொறியாளர் பெரியசாமி ஆகியோர் பின்பற்றவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி செ.வெ.எண்.245 நாள்:21.08.2022ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெறுபவர்கள் கட்டட மற்றும் திட்ட அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு அளவு மற்றும் விவரக்குறிப்பின் அடிப்படையில் தான் கட்டடங்களை கட்ட வேண்டும். அனுமதியில் குறிப்பிடப்படாத, விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் கண்டறியப்பட்டு கட்டட உரிமையாளர்களுக்கு குறிப்பாணை வழங்கப்படும். மேலும், தகுந்த விவரங்கள் மற்றும் போதிய ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட கட்டடத்தை மூடி சீல் வைக்க குறிப்பாணை வழங்கப்பட்டு, குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு மாநகராட்சி அலுவலர்களால் மூடி சீல் வைக்கப்படும் என்று உள்ளது. ஆனால் மேற்கண்ட கட்டடத்தை திட்ட அனுமதி படி ஒரு சதீவீதம் கூட பின்பற்றிக் கட்டவில்லை.

06.08.2012 அன்று தினமலர் நாளிதழில் வந்த செய்தியில் விதிமுறை கட்டடங்கள் சம்மந்தமாக முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு புகார்கள் வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவற்றின் மீது மாநகராட்சி கமிஷ்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 200க்கும் மேற்பட்ட புகார் மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று செய்தி வெளியானது.

பத்துவருடங்கள் கழித்து அதே போல் செய்தி 29.08.2022 அன்று தினமலர் நாளிதழில் உள்ளாட்சி அமைப்புகளின் பல பகுதிகளில், விதிகளை மீறி கட்டடங்கள் கட்டப்படுவதாக, நகராட்சி நிர்வாகத் துறைக்கும், முதல்வரின் தனி பிரிவுக்கும் புகார்கள் வருகின்றன என்று செய்தி

வெளியாகியுள்ளது. ஆனால், மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி பொது அதிகார அமைப்புகளில் உள்ளவர்கள் 2032 வந்தாலும் நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.

ஆகவே, ஐயா அவர்கள் மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின் உரிமையாளரிடம் நாங்கள் அனுப்பிய தகவல் பெறும் உரிமைச் சட்டம் மனுவை காண்பித்து கையூட்டு பெற்றுக்கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் செய்தி குறிப்பாணையை துச்சமென நினைத்தும் மற்றும் அனுமதியில்லாத கட்டடம் மீது நடவடிக்கை வாரம் ஒருமுறை கூட்டம் நடத்த உத்தரவு என்று உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அளித்த உத்தரவையும் மதிக்காமல் செயல்படும் மண்டலம் - 9ன் செயற்பொறியாளர் திரு. பானுகுமார் II, Unit 26ன் உதவி செயற்பொறியாளர் சித்ரா மற்றும் 112வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் பெரியசாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 17.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**முறையீட்டு மனுதாரர் 17.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு 112 மண்டலம் 9 கோடம்பாக்கம் சிவன் கோயில் தெற்கு தெரு, கதவு எண் 57ல் அமைந்துள்ள கட்டடம் மாநகராட்சியின் வரைபட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு குறித்து மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியும், மேற்கண்ட கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. பெயருக்கு Notice calling for Approved Plan மற்றும் Stop work notice வழங்கியுள்ளனர். அதன் தொடர் நடவடிக்கை ஏதும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட அனுமதியற்ற கட்டடம் கட்டுவதற்கு மண்டலம் 9ஐ சார்ந்த மாநகராட்சி அலுவலர்கள் உடந்தையாக இருந்து செயல்பட்டுள்ளனர். எனவே, மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீதும், அனுமதியற்ற கட்டடம் கட்டுவதற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 30.8.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்"

**17.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகிய மண்டலம்–9ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு 112 மண்டலம் 9 கோடம்பாக்கம் சிவன் கோயில் தெற்கு தெரு, கதவு எண் 57ல் அமைந்துள்ள கட்டடம் மாநகராட்சியின்

வரைபட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கடந்த 13.9.2022 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும், 23.9.2022 அன்று De-Occupation தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது, மேலும் கட்டடத்தினை பூட்டி சீல் வைத்திட 12.11.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடம் ஆணை பெறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடத்திற்கு பூட்டி சீல் வைக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்கப்படும் மாவட்ட வருவாய் அலுவலரின் 16.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 9ன் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரிடம் கோரப்பட்டது. அவர்கள், தனது 15.11.2022 நாளிட்ட அறிக்கையில்,**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-26, வார்டு-112ல் கதவு எண்.57, சிவன் கோயில் தெற்கு தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024 என்ற முகவரியில் விதிமீறல் கட்டடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 13.09.2022 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும், 23.09.2022 அன்று De-Occupation தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது மேலும் கட்டடத்தினை பூட்டி சீல் வைக்க 12.11.2022 அன்று ஆணையர் அவர்களின் ஆணையும் பெறப்பட்டுள்ளது எனவும் அடுத்து உரிய காவல்துறை பாதுகாப்பு பெறப்பட்டு கட்டடத்தினை பூட்டி சீல் வைக்கப்படும் எனவும் விதிமீறல் கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விதிமீறல் கட்டடத்தின் மீது தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனவும் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மனுதாரரின் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -9ன் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் அறிக்கை ஆகியவற்றின் மூலம் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை கோடம்பாக்கம், சிவன் கோவில் தெரு கதவு எண்.57ல் கட்டப்பட்ட கட்டடம், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டு உள்ளது எனவும், அது குறித்து புகார் மனு அளித்தும் மண்டலம் 9ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 112, பகுதி – 26, மண்டலம் -9 கதவு எண் 57, சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை என்ற முகவரியில் கட்டப்பட்ட கட்டடம், பெருநகர சென்னை மாநகராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும், மேற்கண்ட கட்டடத்திற்கு 13.9.2022 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும், 23.9.2022 அன்று De-Occupation தாக்கீதும், 12.11.2022 அன்று பூட்டி சீல் வைக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் ஆணை பெறப்பட்டுள்ளது எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -9ன் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது. இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் மேலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மனுதாரர் ஏற்கனவே அளித்த புகாரின்படி உரிய உடனடி நடவடிக்கை எடுத்திருந்தால், மேற்கண்ட கட்டடம் முழுமையாக கட்டுவதை நிறுத்தி இருக்க முடியும். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களுக்கு Tamil Nadu Town & Country Planning Act 1971 – U/s 56 மற்றும் 57ன்படி, அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டடங்களை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்த வழிவகை இருந்தும், மனுதாரர் புகார் மனு அளித்த பின்னரும் உரிய நேரத்தில் தன் கடமையை செய்யாமலும் நடவடிக்கை எடுக்காமலும் இருந்த மண்டல அலுவலர்களின் மெத்தன போக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. அவ்வாறு ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து இருந்தால் அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டடத்தினை நிறுத்தி இருக்கலாம். மேலும் Chennai City Corporation Act 1919-ன்படி பிரிவு 296ன் படியும் உரிய நடவடிக்கை எடுத்து இருக்கலாம். அதனால் அனுமதிக்கு மாறாக கட்டடம் முழுமையாக கட்டப்படும்வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காத முன்னாள் மற்றும் தற்போதைய மண்டல அலுவலர்களை பொறுப்பாக்கி அவர்களின் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -9ன் உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட கட்டடத்திற்கு பூட்டி சீல் வைக்க உரிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கையை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

**The Greater Chennai Corporation Commissioner is directed to issue appropriate instructions to the Deputy Commissioners in-charge of the various Zones to review this item of work critically so that the field officials are on their toes. This Forum feels that the Assistant Commissioners of the Zones are not effective and sincere in enforcing the Building Plan rules in a timely manner to avoid complaints by social activists and petitioners who approach this Forum for orders and sometimes they may seek redress from the Courts also. It is strongly observed that unless stringent punishments are awarded for offences of this kind that smack of favouritism, complicity, collusion and corruption at the field level, the trend will worsen further.**

**The Forum has also seen sheer indifference on the part of the staff who are responsible for issue of notices from calling for the Building Plan approval till demolition notice without adhering to the time limits in between that runs into some years also in certain cases.**

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. G. தேவா,
C-50, பிளாசா மேனர் பிளாட்,
எண்.1, கருமாரி அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை – 600 026.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (Works)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*
4. செயற் பொறியாளர்,
உதவி செயற் பொறியளார்,
உதவி நிர்வாகப் பொறியாளர்,
மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1, 4வது குறுக்குத் தெரு, லேக் ஏரியா,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
5. துணை ஆணையர்,
மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1, 4வது குறுக்குத் தெரு, லேக் ஏரியா,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
*He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.